**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No. 539/2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw12/Pw9 |
| Name | : Paariporanam |
| Father/Husband's Name | : Suresh |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30.07.2026.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது செங்குன்றம் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 18.11.2025 ஆம் தேதி கூடுவாஞ்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது புகார்தாரர் கொடுத்த புகாரைபெற்று காவல் உதவி ஆய்வாளர் ஜெகதீசன் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மேல்விசாரணைக்காக என் பார்வைக்கு வைக்கப்பட்டதை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மதியாஸ் மற்றும் ராஜன் ஆகிய முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும்மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவை முறையே **அதசா.ஆ. 10 மற்றும் 11** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரை உள்ளவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. இவ்வழக்கில் எதிரிகளை தேடி வந்த நிலையில் 19.11.2025 ஆம் தேதி பகல் ஒரு மணி அளவில் ஆதனூர் மேம்பாலம் அருகே உள்ள கேஎப்சி கடைக்கு அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருக்கும் பொழுது அவ்வழியாக கூடுவாஞ்சேரி நோக்கி வந்த இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களை நிறுத்தி விசாரித்த போது அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறியதால் மீண்டும் அவர்களை விசாரித்த போது அவர்கள் கூடுவாஞ்சேரி குற்ற எண் 283/2025 என்ற வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் என்று தெரிய வந்து அவர்களை 13.05 மணிக்கு கைது செய்து முதலாவது எதிரி சிவசங்கர் என்பவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தங்கராஜ் மற்றும் வெங்கடேசன் ஆகிய முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அதசா.ஆ. 12** ஆக குறியீடு செய்யப்படுகிறது . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் முதலாவது எதிரி சிவசங்கர் குற்றத்திற்கு பயன்படுத்திய சுமார் 40 சென்டிமீட்டர் நீளமுள்ள இரும்பு மர கைப்பிடி கூடிய கத்தி ஒன்று மற்றும் பதிவு எண் TN–11–AJ–8861 என்ற இருசக்கர வாகனத்தை மேல்சொன்ன சாட்சிகள் முன்னிலையில்கைப்பற்றுதல்மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன்.

3. இரண்டாவது எதிரியான லியோனட் டேனியல் ஜேம்ஸ் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அதசா.ஆ. 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது . அவர் எடுத்த ஆஜர் செய்த சுமார்

25.5 சென்டி மீட்டர் நீளமுள்ள இரும்பு மர கைப்பிடி உடன் கூடிய கத்தி ஒன்று மற்றும் ரூபாய் 500 ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்ற தயார் செய்து கைப்பற்றினேன். பட்டியல் சாட்சிகள் எட்டு மற்றும் ஒன்பது ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் அந்த படிவம் 95 **அதசா.ஆ. 14** ஆக குறியீடு செய்யப்படுகிறது கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் **ச.பொ** 1 **முதல்** 4 **வரை** குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் இவ்வாழ்க்கையின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்ட பிரிவுகள் 126(2), 296(b), 308(5), 309(4), 351(3) BNS இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை:**

**1.** பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் தயார் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும், அதனால் தான் அந்த சாட்சிகள் முதல் விசாரணையில் வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. போலீசார் விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றாலும் சரி அல்ல. விசாரணையில் காவல் அவசர எண் 100 தகவல் வந்ததாக விசாரணை தெரிந்து கொண்டேனா என்றால் அவ்வாறு தகவல் ஏதும் வரவில்லை. எதிரிகளை கைது செய்த போது புகார் அளித்து அடையாளம் காண்பிக்க சொன்னேனா என்றால் இல்லை. இந்த வழக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் புகார் அவ்வாறு ஒரு புகார் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அதனால்தான் புகார்தாரை அழைத்து அடையாளம் காண்பிக்க சொல்லவில்லை என்றாலும் கையெழுத்து மட்டும் பெற்றுக் கொண்டு புகார் கொடுக்கவில்லை என்று புகார்தார சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

2. சொன்ன நேரத்தில் சொன்ன நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், அவர்களிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. இறுதி அறிக்கையில் ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் கையொப்பம் பெறப்பட்டது என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் அவர் சொல்லவில்லை. காவலத்தில் வைத்து ஆவணத்தை தயார் செய்ததால் தான் அவ்வாறு இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu